DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**STC.No.548/2025**

Prosecution **PW.1**

Court

பு.சா. 1 தினேஷ் த/பெ செல்வராஜ்

தேதி: 07.05.2026.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. எதிரிக்கு கொடுத்தாக சொல்லப்படும் தொகை ரூபாய் மூன்று லட்சம் ஆகும். எத்தனை சதவீதம் வட்டியுடன் திருப்பி தரவேண்டும் என்று நான் சொல்வது போல் கடன் கொடுத்தேன் என்றால் ஆண்டும் 12% வட்டி தருவதாக சொன்னார். வழக்கு காசோலையில் வட்டி தொடர்பாக எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிக்கு பணம் கொடுத்து வட்டியுடன் திருப்பி தரவேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்ததால் காசோலையில் வட்டியுடன் தான் சேர்த்து தொகைபூர்த்தி செய்து பெற்றிருப்பேன் என்றால் பணம் கொடுக்கும் போது வட்டி தருவதாக எதிரி சொன்னார்.

2. பணம் கொடுக்கும்போது வட்டி தருவதாக சொன்னால் இந்த வழக்கு காசோலை எதற்காக கொடுத்தது என்றால் என்னிடம் வாங்கிய தொகைக்காக வழக்கு காசோலை கொடுக்கப்பட்டது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல். என்னிடம் காட்டும் வழக்கு காசோலையில் எழுதியது மையினாலும், கையொப்பம் ஒரு மையினாலும் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல எதிரி கொடுத்தது தான். என்னிடம் காட்டப்படும் காசோலையை எழுதியது மற்றும் கையொப்பம் செய்தது வேறு இங்க் என்பதற்காக வல்லுநருக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை உண்டா என்றால் இல்லை.

3. வழக்கில் சொல்லியுள்ள ரூபாய் மூன்று லட்சம் நான் எப்படி சம்பாதித்தேன் என்று புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ரூபாய் மூன்று லட்சம் என்பது என்னை பொறுத்தவரை ஒரு பெரிய தொகை என்றால் சரிதான். வழக்கு பெரிய தொகையை கொடுக்கும் போது உரிய ஆவணம் பெற வேண்டும் என்ற சட்ட அறிவு உள்ள நபர் நான் என்றால் சரிதான். நான் எதிரிக்கு பணம்

கொடுத்தாக சொல்லப்படும் 30.07.2025ம் தேதி அன்று எதிரியிடம் இருந்து ஏதாவது ஆவணம் பெற்றேனா என்றால் வழக்கு காசோலை பெற்றேன்.

4. எனது வழக்கறிஞரிடமும் நான் பணம் கொடுக்கும் போது காசோலை பெற்றேன் என்ற விவரம் சொன்னேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிபபு, புகார், முதல் விசாரணை வாக்குமூலத்தை பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் முதல் விசாரணை வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பு, புகாரரிலும் எந்த தேதியில் காசோலை வாங்கினேன் என்று கூறிப்பிட்டுள்ளேன் என்றால் 15.10.2025 அன்று தான் காசோலை கொடுத்ததாக சொல்லியுள்ளேன்.

5. என்னிடம் காட்டப்படும் புகாரில் 15.10.2025 அன்று தான் காசோலை கொடுத்தாக ஆங்கிலத்தில் கூறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆங்கிலம் தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம் படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல சரியாக ஆங்கிலம் வராது. நான் சொல்வது போல் 30.07.2025 அன்று நான் பணம் கொடுக்கும்போது மணிகண்டன் வந்ததாக சொல்லப்படுவது நான் தகவல் சொல்லி வந்தாரா அல்லது எதார்தமாக வந்தாரா என்றால் நான் தகவல் கொடுத்து வந்தார்.

6. நான் கூப்பிட்டு எவ்வளவு நேரத்தில வந்தார் மணிகண்டன் கடையில் இருந்தார் நான் தான் கடைக்கு சென்றேன். மணிகண்டன் என்ன கடை வைத்துள்ளார் எ ன்றால் போட்டோ ஸ்டியோ வைத்துள்ளார். அன்றைய தேதியில் என்னுடைய போன் Call History பார்த்தால் போன் செய்த விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். நான் 30.07.2025 அன்று எந்த பேங்கில் இருந்து பணம் எடுத்து வந்தேன் என்றால் நான் நகையை பேங்க் ஆப் இந்தியவில் அடமானம் வைத்து எடுத்து வந்தேன். நான் பேங்க் ஆப் இந்தியாவில் அடமானம் வைத்து பெற்ற தொகைக்கும், இந்த வழக்கு தொகைக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

7. நான் மணிகண்டன் கடைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் பகல் 11.00–11.30 இருக்கும். கடை 10.00 மணிக்கு மேல் திறப்பார்கள் என்றால் சரிதான். மணிகண்டன் கடை எங்குள்ளது என்றால் கிருஷ்ணராயபுரம் பேங்க் ஆப் இந்தியா அருகில் உள்ளது. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எதிரி கிருஷ்ணராயபுரத்தில் இருக்க வாய்ப்பு இல்லை

என்றால் திவ்யா  போன் சொய்து சொல்லி அவருடைய கணவர் முத்துராஜா பணம் வாங்கிக்கொண்டு காசோலை கொடுத்தார்.

8. என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தில் 4 ல்  எதிரியை நம்பி எதிரிக்கு ரூபாய் மூன்று லட்சத்தை  கடனாக 30.07.2025 ம் தேதி  கிருஷ்ணராயபுரத்தில் வசிக்கும் மணிகண்டன் முன்னிலையில் கொடுத்தேன் என்று சொல்லியிருப்பது தவறு என்றால்  இல்லை திவ்யா போன் செய்து சொல்லி அவருடைய கணவரிடம் பணம் கொடுத்தேன். திவ்யாவிடம் பணம் கொடுத்தேன் என்பதற்கும், திவ்யா போன் செய்து திவ்யாவின் கணவரிடம் பணம் கொடுத்தேன் என்பதற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான்.

9. நான் தாக்கல் செய்த வழக்கில் 30.07.2025 ம் அன்று திவ்யாவிடம் பணம் கொடுத்தாக  உள்ளது என்றால் சரிதான்.  சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில்  எதிரி கரூரில் ஆல்பா டெக்சில் காலை 08.10 மணிக்கு  வேலைக்கு உள்ளே சென்று பின்பு மாலை 06.15 மணியளவில் தான் வேலையை விட்டு வெளியே வந்தார் என்றால் அவரது கணவர் போன் செய்து வெளியே வரவழைத்து காசோலையில் கைபொப்பம் வாங்கி  கொடுத்தார்.  30.07.2025 ம் தேதி நான் திவ்யாவை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**<u>தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.11 10:25:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.